பிரதமர் மோடியுடன் கிறிஸ்டோபர் லக்சன் சந்திப்பு

இந்தியா–நியூசிலாந்து இடையே ராணுவ ஒப்பந்தம் கையெழுத்து

தீவிரவாதத்தை எதிர்த்து போரிட இணைந்து செயல்படுவோம்

புதுடெல்லி, மார்ச்.18

இந்தியா வந்துள்ள நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லுக்சன் பிரதமர் மோடியை நேற்று சந்தித்துப் பேசினார். அப்போது இந்தியா–நியூசிலாந்து இடையே ராணுவ ஒப்பந்தம் கையெழுத்தாகியது. தீவிரவாதத்தை எதிர்த்து போரிடுவதில் இரு நாடுகளும் இணைந்து செயல்படும் என பிரதமர் மோடி தெரிவித்தார்.

நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் 5 நாள் பயணமாக நேற்று முன்தினம் இந்தியா வந்தார். டெல்லியில் நேற்று அவர் பிரதமர் மோடியை சந்தித்து பேசினார். அப்போது இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது, குறிப்பாக வர்த்தகம், ராணுவம், கல்வி மற்றும் வேளாண்மை உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த பேச்சுவார்த்தையின் முடிவில் இந்தியா–நியூசிலாந்து இடையே ராணுவம் மற்றும் பாதுகாப்பு உறவுகளை நிறுவனமயமாக்கும் வகையிலான மெகா ஒப்பந்தம் கையெழுத்தானது.

முன்னதாக நியூசிலாந்து மண்ணில் இந்தியாவுக்கு எதிரான சட்ட விரோத செயல்களை அரங்கேற்றும் சக்திகள் குறித்து அந்த நாட்டு பிரதமரிடம் மோடி கவலை தெரிவித்தார்.

பேச்சு வார்த்தையை தொடர்ந்து இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பிரதமர் மோடி கூறியதாவது:

ராணுவம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், நிறுவன மயமாக்கவும் நாங்கள் முடிவு செய்தோம். மேலும் இரு நாட்டு பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்புக்கான ஒரு செயல்திட்டம் தயாரிக்கப்படும்.

பயங்கரவாதத்துக்கு எதிராக நாங்கள் ஒருமனதாக இருக்கிறோம். அது 2019ல் நடந்த கிறைஸ்ட்சர்ச் பயங்கரவாத தாக்குதலோ அல்லது 2008 மும்பை தாக்குதலோ எதுவாக இருந்தாலும் எந்த வகையிலான பயங்கரவாதத்தையும் ஏற்க முடியாது.

பயங்கரவாத தாக்குதல் குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை தேவை. பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் உள்ளிட்டோருக்கு எதிரான நடவடிக்கைகளில் நாங்கள் ஒத்துழைப்பை தொடர்வோம்.

அந்தவகையில் நியூசிலாந்தில் சில இந்திய விரோத செயல்பாடுகள் குறித்து எங்கள் கவலையை பகிர்ந்து கொண்டோம். இந்த சட்டவிரோத சக்திகள் அனைத்துக்கும் எதிராக நியூசிலாந்து அரசிடமிருந்து தொடர்ந்து ஒத்துழைப்பு கிடைக்கும் என்று இந்தியா நம்புகிறது.

மேலும் பரஸ்பர நலன் சார்ந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளை தொடங்க இந்தியாவும், நியூசிலாந்தும் முடிவு செய்துள்ளது.

இது பரஸ்பர வர்த்தகம் மற்றும் முதலீட்டின் திறனை அதிகரிக்கும். பால், உணவு பதப்படுத்துதல் மற்றும் மருந்து போன்ற துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் முதலீடு ஊக்குவிக்கப்படும்.

இந்தியாவும், நியூசிலாந்தும் ஒரு தடையற்ற, வெளிப்படையான மற்றும் பாதுகாப்பான இந்தோ பசிபிக் பிராந்தியத்துக்கு ஆதரவு அளிக்கின்றன. விரிவாக்கம் அற்ற வளர்ச்சிக் கொள்கையை நாங்கள் நம்புகிறோம்.

இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் பேசும்போது, 'இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் ஒரு சவாலான கண்ணோட்டத்தைப் பற்றி பிரதமர் மோடியும், நானும் விவாதித்தோம். வளமான இந்தோபசிபிக் பிராந்தியத்துக்கு பங்களிப்பதில் நமது நலன்கள் குறித்த பகிரப்பட்ட கவலைகளை நிவர்த்தி செய்வதற்கான வலுவான உறுதிப்பாட்டை நான் வலியுறுத்தினேன்' என்று தெரிவித்தார்.

ரெயில்வே துறையில் மேலும் 1 லட்சம் பேர் நியமனம்: மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தகவல்

புதுடெல்லி, மார்ச்.18–

ரெயில்வே துறையில் நிதி நிலை சிறப்பாக உள்ளது. ரெயில்வே துறையில் மேலும் 1 லட்சம் பேர் நியமிக்கப்படவுள்ளனர் என்று மாநிலங்களவையில் மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் நேற்று ரெயில்வே துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடந்தது. அப்போது ரெயில்வே துறை மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினர்.

இதற்கு பதில் அளித்து ரெயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பேசியதாவது: – ரெயில்வேயில் வேலைவாய்ப்பு வழங்கவில்லை என பல உறுப்பினர்கள் தெரிவித்தனர். எப்படி இத்தகைய உண்மைக்கு மாறான தகவல்களை அவையில் கூற முடியும்?

ரெயில்வே துறையில் கடந்த 10 ஆண்டுகளில் 5 லட்சம் பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டு உள்ளனர். மேலும் 1 லட்சம் பேரை நியமிப்பதற்கான பணிகளும் நடந்து வருகிறது. ரெயில்வே பணி நியமனங்கள் வெளிப்படையாக நடந்து வருகின்றன.

அடுத்த 5 அல்லது 6 ஆண்டுகளில் ஒட்டுமொத்த ரெயில்வேயும் தானியங்கி பாதுகாப்பு தொழில்நுட்பமான கவாச் அமைப்புக்குள் கொண்டுவரப்படும்.

மேற்கு வங்காளம், தமிழ்நாடு, கேரளா போன்ற எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் கிடப்பில் உள்ள அல்லது தாமதமான ரெயில்வே திட்டங்களை விரைவில் முடிக்க ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

சிறப்பான செயல்பாடு காரணமாக ரெயில்வே தனது செலவினங்களை சொந்தமாகவே எதிர்கொள்ளும் திறன் பெற்று உள்ளது. ஒட்டுமொத்தமாக ரெயில்வேயின் நிதி நிலை சிறப்பாக உள்ளது. அண்டை நாடுகளை ஒப்பிடுகையில் இந்தியாவில் ரெயில் கட்டணம் குறைவாகவே உள்ளது. 350 கி.மீ. பயணத்துக்கு இந்தியாவில் ரூ.121 மட்டுமே வசூலிக்கப்படுகிறது. ஆனால் இது பாகிஸ்தானில் ரூ.400 ஆகவும், இலங்கையில் ரூ.413 ஆகவும் உள்ளது. சரக்கு போக்குவரத்தில் வருவாயை பெருக்கிக்கொண்டு, பயணிகளுக்கு சலுகை அளிக்கப்படுகிறது.

இவ்வாறு அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

ரூ.100 கோடியில் கன்னியாகுமரியில் விண்வெளி அருங்காட்சியகம்

சந்திரயான்–5 திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி

இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் தகவல்

கன்னியாகுமரி, மார்ச்.18

சந்திரயான்–5 திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதாக இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரியில் நிகழ்ச்சியொன்றில் பங்கேற்ற அவர் இதுகுறித்து மேலும் கூறியதாவது: சந்திரயான்–5 திட்டத்துக்கான அனுமதியை மத்திய அரசிடமிருந்து சில நாட்களுக்கு முன்னர்தான் பெற்றுள்ளோம். இந்த திட்டத்தில் ஜப்பானுடன் இணைந்து நாங்கள் செயல்பட உள்ளோம். இது, சந்திரயான்–5 திட்டத்தின் அறிவியல் திறன்களை மேலும் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. 2023 ஆகஸ்ட் 23ல் சந்திரயான்–3 வெற்றிகரமாக நிலவின் தென் துருவத்தில் எந்தவித சேதாரமும் இன்றி சாப்ட் லேண்டிங் மூலம் விக்ரம் லேண்டரை தரையிறக்கியது. இதன் மூலம், இந்த சாதனையை படைத்த உலகின் 4வது நாடு என்ற பெருமை ரஷ்யா, அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்த படியாக இந்தியாவுக்கு கிடைத்தது.

சந்திரயான்–5 திட்டம் நிலவை முழுமையாக ஆராய்ச்சி செய்யும் நோக்கம் கொண்டது. எனவே, சந்திரயான் 3 ல் பயன்படுத்தப்பட்டது போன்று சிறிய வகை ரோவர் இதில் இடம்பெறாது. அதற்கு பதிலாக 250 கிலோ எடையுள்ள பெரிய ரோவரை அனுப்பி சந்திரனின் மேற்பரப்பை விரிவாக ஆய்வு செய்ய உள்ளோம். இவ்வாறு நாராயணன் தெரிவித்தார்.

சந்திரயான் 5 மற்றும் 6வது திட்டங்களை அடுத்த 10 ஆண்டுகளுக்குள் நிறைவேற்ற இஸ்ரோ திட்ட மிட்டுள்ளது. இது, விண்வெளித் துறையில் 44 பில்லியன் டாலர் மைல்கல்லை தொடுவதற்கு ஏதுவாக அமையும். இதனை தொடர்ந்து ககன்யான் திட்டத்தையும் இஸ்ரோ செயல்படுத்த உள்ளது. இது, விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டமாகும்.

இதனை யடுத்து சென்னையில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளில் இஸ்ரோ தலைவர் வி.நாராயணன், கலந்து கொண்டார். அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:–

நிலவில் நீர் இருப்பதை முதன் முதலில் கண்டுப்பிடித்தது இஸ்ரோ தான். நிலவில் இறங்குவதே பெரிய விஷயம், அதற்கு பிறகு அங்குள்ள மாதிரிகளை எடுக்க 'ரோபோட்டிக்' தேவை. இதுதொடர்பான சோதனைகள் தீவிரமாக நடந்து வருகிறது. சந்திரயான்–4 திட்டம் மூலம் நிலவில் என்ன வகை கனிமங்கள் உள்ளன? என்பது குறித்து ஆராய்ச்சி செய்ய உள்ளோம். மனிதனை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டம் ராக்கெட் விண்ணில் செலுத்துவதற்கு முன்பாக 3 ஆள் இல்லாத ராக்கெட்டுகள் அனுப்பி சோதனை செய்யப்பட உள்ளது. முதல் ராக்கெட் ஏவுவதற்கான பணிகள் ஸ்ரீஹரிகோட்டாவில் தீவிரமாக நடக்கிறது. அது வெற்றி பெற்றால் அடுத்து 2 ராக்கெட்டுகளும் ஒன்றரை ஆண்டுகளில் விண்ணில் ஏவி சோதனை செய்யப்படும். இதற்காக விண்வெளிக்கு அனுப்பப்படும் வீரர்களின் பாதுகாப்பிற்காக, அமரும் பகுதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புகள் குறித்து சோதனை நடந்து வருகிறது.

இந்தியாவிற்கு சொந்தமான விண்வெளி நிலையம் 2035ம் ஆண்டு செயல்பாட்டுக்கு வர உள்ளது. 52 டன் எடை கொண்ட இந்த நிலையம் 5 பிரிவுகளாக பிரித்து ராக்கெட்டுகளில் விண்ணுக்கு அனுப்பப்படுகிறது. இதில் முதல் பிரிவு 2028ம் ஆண்டு விண்ணுக்கு அனுப்ப பிரதமர் மோடி அனுமதி அளித்துள்ளார்.

குலசேகரப்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் அமைக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. அடுத்த 2 ஆண்டுகளில் அங்கிருந்து எஸ்.எஸ்.எல்.வி. ரக ராக்கெட்டுகள் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்படும்.

கன்னியாகுமரியில் ரூ.100 கோடியில் விண்வெளி அருங்காட்சியகம் மற்றும் விண்வெளி மையம் அமைக்க இஸ்ரோ திட்டமிட்ட நிலையில், தமிழக அரசு 10 ஏக்கர் நிலம் ஒதுக்கி உள்ளது. அதற்கு அனுமதியை மத்திய அரசு அளித்துள்ளது.

ஆக்சியம்–4 திட்டத்தின் மூலம் உணவு பயிர்களை விண்வெளியில் வளர்க்க ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்துடன் இஸ்ரோ திட்ட மிட்டுள்ளது. ஏற்கனவே தட்டை பயிர் விதைகளை விண்ணில் விளைவித்து சாதனை படைத்தோம். தொடர்ந்து விண்வெளியில் விவசாயம் என்ற புரட்சியை செய்வது குறித்தும் ஆராய்ச்சிகள் நடந்து வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் மைய இயக்குனர் ராஜராஜன் உடன் இருந்தார்.

MANAPPURAM HOME FINANCE LTD.

மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

முன்பு மணப்புரம் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

CIN: U65923K12010PIC039179,

பதிவு அலுவலகம்: IV/470A, (பழையது) W/638A (புதியது) மணப்புரம் ஹவுஸ், வளபாடு திருச்சூர், கேரளா – 680 567

கார்ப்பரேட் அலுவலகம்: மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட், 3வது தளம், யூனிட் எண்.301–315, ஏ விங், ''கனக்கியா வால் தெரு'', அந்தேரி குர்லா சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை – 400 093, மகாராஷ்டிரா.

போன்: 022–66211000, இணையதளம் : www.manappuramhomefin.com

டிமாண்ட் நோட்டீஸ்

நிறுவனங்கள் சட்டம், 1956ன் கீழ் பதிவு செய்யப்பட்ட மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட் பதிவு அலுவலகம் : IV/470A (பழையது) w/638A (புதியது), மணப்புரம் ஹவுஸ், வளபாடு, திருச்சூர், கேரளா 680567 மற்றும் இந்தியாவில் பல்வேறு இடங்களில் கிளைகளுடன் (இனி "MAHOFIN" என குறிப்பிடப்படுகிறது) செயல்படும் இந்நிறுவனம் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு நலச் சட்டம் 2002ன் (இனிமேல் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) பிரிவு 2ன் உட்பிரிவு (1)ன் உட்பிரிவு (m)ன் உட்பிரிவு (iv)ன் பொருளில் உள்ள நிதி நிறுவனம் மற்றும் இந்திய அரசின், நிதிச் சேவைகள் துறையின், நிதி அமைச்சகம், புதுடெல்லி வெளியிட்ட டிசம்பர் 18, 2015 தேதியிட்ட அறிவிப்பு எண். எஸ்.ஓ. 3466 (இ) ஆகியவற்றின் கீழ் கட்டுமானம் மற்றும் / அல்லது குடியிருப்பு வீடுகளை வாங்குவதற்கான கடன் வழங்கும் வணிகத்துடன் மற்ற வணிகத்தை மேற்கொண்டு வருகிறது. அதேசமயம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை வரிசை எண். 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி கடன்தாரர் / உடன் கடன்தாரர்கள் MAHOFINலிருந்து கடன் பெற்றனர் மற்றும் அதேசமயம் SARFAESI சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குனராக MAHOFIN உள்ளது மற்றும் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2) மற்றும் விதி 2ன் கீழ் அதன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி கடன்தாரர்கள் / உடன் கடன்தாரர்கள், நோட்டீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அறிவிப்புத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் கூடுதல் வட்டியுடன் திருப்பிச் செலுத்துமாறு கோரிக்கை அறிவிப்பை வழங்கியிருந்தார். ஆனால் பல்வேறு காரணங்களுக்காக அவர்களில் சிலருக்கு நோட்டீஸ் வழங்கப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் கீழே பட்டியலிடப்பட்டுள்ள கடன்தாரர்களின் தகவல்களின் நோக்கங்களுக்காக, இந்த பொது அறிவிப்பின் மூலம் கடன் பெற்றவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர்/ உடன்கடன்தாரர் பெயர்/ LAN/கிளை	ஈடுபெற்ற சொத்துக்களின் விவரம் இது தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பாத்தியதை	என்பிஏ தேதி	அறிவிப்பு அனுப்பப்பட்ட தேதி மற்றும் செலுத்த வேண்டிய தொகை
1	சூர்யப்ரியா E E மஞ்சுளா A. குழுமலை D.காமேஸ்வரம் / NHL00410013199/ காஞ்சிபுரம்	மொத்த விஸ்தீரணம் 1291 சதுர அடி. புதிய எஸ். எண். 158/101, காஞ்சிவாக்கம் கிராமம், குன்றத்தூர் தாலுக்கா, கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் அலுவலகம், தென் சென்னை பதிவு மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு, பின்கோடு: 631601. எல்லைகள் : கிழக்கு – காலி மனை, மேற்கு – சாலை, தெற்கு – காலி மனை, வடக்கு – காலி மனை	14-02-2025	18-02-2025 & ரூ. 854148/-
2	மல்லிகா M பிரகாஷ் M /MHL00410014535/ காஞ்சிபுரம்	மொத்த விதீரணம் 5210 சதுர அடி, வீட்டு மனை சொத்தின் கீழ்ப்பட்டா எண். 451, புஞ்சை எஸ். எண். 240A/15A, அரியூர் கிராமம், வெம்பாக்கம் தாலுக்கா, எண். 1, வெம்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகம், செய்யார் பதிவு மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், தமிழ்நாடு, பின்கோடு – 632 511. எல்லைகள் : கிழக்கு : மகாலிங்கம் மனை, மேற்கு : சிமெண்ட் சாலை, தெற்கு : ஆற்காடு – வடஇலுப்பை சாலை, வடக்கு : முருகேன் வீடு.	14-02-2025	18-02-2025 & ரூ. 738134/-

எனவே, மேலே குறிப்பிட்டுள்ளபடி, இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள், அந்தந்த கடன்தாரர் / உடன் கடன்தாரர்களுக்கு எதிராக, மேலே காட்டப்பட்டுள்ள மொத்த நிலுவைத் தொகையை செலுத்துமாறு கடன்தாரர்கள் / உடன் கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மொத்த நிலுவைத் தொகையை அந்தந்த கடன்தாரர்/ உடன் கடன்தாரர்கள் கூடுதல் வட்டியுடன் சேர்த்து செலுத்தத் தவறினால், MAHOFIN மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மீது உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(4)ன் கீழ் நடவடிக்கையை மேற்கொள்ளும். சட்டம் மற்றும் இங்கு உருவாக்கப்பட்ட விதிகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட பிற முறைகளில் அறிவிப்பு சேவைக்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன. SARFAESI சட்டத்தின் பிரிவு 13(8)ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, பொது ஏலம் அல்லது தனியார் ஒப்பந்த விற்பனை மூலம் மாற்றுவதற்கான அறிவிப்பு வெளியிடப்படும் தேதிக்கு முன்பு எந்த நேரத்திலும் MAHOFINக்கு ஏற்படும் செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றுடன் செலுத்த வேண்டிய முழுத் தொகையையும் செலுத்துவதன் மூலம், கூறப்பட்ட அடமானத்தை மீட்டெடுக்க முடியும் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

SARFAESI **சட்டத்தின் எஸ் 13 (13)ன் கீழ், விற்பனை, குத்தகை அல்லது வேறு எந்த வகையிலும் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மாற்றுவது மற்றும்/அல்லது கையாள்வதில் இருந்து நீங்கள் தடை செய்யப்படுகிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளவும்.**

ஒப்பம்/–

தேதி: மார்ச் 18, 2025
இடம்: தமிழ்நாடு

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

வேலூர் மாவட்டத்தில் 5 வயதுக்கு உட்பட்ட 98,229 குழந்தைகளுக்கு வைட்டமின்–ஏ சொட்டு மருந்து: கலெக்டர் சுப்புலெட்சுமி வழங்கி தொடங்கி வைத்தார்

வேலூர், மார்ச்.18–

வேலூர் மாவட்டத்தில் 98,229 குழந்தைகளுக்கு வைட்டமின்–ஏ சொட்டு மருந்து வழங்குவதை கலெக்டர் சுப்புலெட்சுமி தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் சுகாதார துறையின் மூலம் தேசிய வைட்டமின்–ஏ குறைபாடு தடுப்பு திட்டத்தின்கீழ் 6 மாதம் முதல் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு 6 மாதங்களுக்கு ஒருமுறை வைட்டமின்ஏ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி தமிழகம் முழுவதும் வைட்டமின்–ஏ சொட்டு மருந்து வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. வேலூர் சத்துவாச்சாரி வ.உ.சி.நகரில் உள்ள அங்கன்வாடி மையத்தில் வைட்டமின்–ஏ சொட்டு மருந்து வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. வேலூர் மாவட்ட சுகாதாரப்பணிகள் துணை இயக்குனர் பரணிதரன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணி திட்டஅலுவலர் சாந்தி பிரியதர்சினி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் சுப்புலெட்சுமி தலைமை தாங்கி வைட்டமின்ஏ சொட்டு மருந்து வழங்கி தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் கூறுகையில், வேலூர் மாவட்டத்தில் 6 மாதம் முதல் 5 வயதுக்கு உட்பட்ட 98,229 குழந்தைகள் உள்ளனர். 6 மாதம் முதல் 1 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு 1 மில்லி அளவும், 1 முதல் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு 2 மில்லி அளவும் சொட்டு மருந்து வழங்கப்படுகிறது. வருகிற 22ந் தேதி வரை வைட்டமின்ஏ சொட்டு மருந்து வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 221 துணை சுகாதார நிலையங்கள், 1,075 அங்கன்வாடிகளில் புதன்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில் வைட்டமின்ஏ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது. இந்த பணியில் கிராம சுகாதார செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் உள்பட 1,244 பேர் ஈடுபடுகின்றனர்.

இந்த முகாமில் பெற்றோர் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை அழைத்து சென்று அவர்களுக்கு சொட்டு மருந்து கொடுக்க வேண்டும். இதன் மூலம் வைட்டமின்ஏ குறைபாடு நோய்களான மாலைக்கண் நோய், பார்வை இழப்பு, வயிற்றுபோக்கு, நிமோனியா, தீவிர ஊட்டச்சத்து குறைபாடு போன்ற நோய்கள் தடுக்கப்பட்டு, நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும் என்றார்.

நிகழ்ச்சியில் சத்துவாச்சாரி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் கண்மணி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025

CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி **27 மார்ச், 2025** அன்று மாலை 3:00 மணிக்கு கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் ஏலத்தில் பங்கேற்கலாம்.

வ. எண்.	கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்	தந்தை/ மனைவி/கணவன் பெயர்	முகவரி	கணக்கு துவக்க தேதி	செலுத்த வேண்டிய தொகை
1	சென்னை	104142511375	வி. லட்சுமணன்	த/பெ. வடிவேலு	எண் 35, மேடாக்ஸ் தெரு, குளை, சென்னை, தமிழ்நாடு 600112	14-11-2024	2,02,000.24
2	சென்னை	104142511380	வளர்மதி ஆர்	க/பெ. வேல்முருகன் C/o. ராஜா	27 சி பூந்தமல்லி சாலை, ஈக்காட்டுதாங்கல், கிண்டி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை, தமிழ்நாடு 600032	15-11-2024	2,44,917.33
3	சென்னை	104142511378	என் ஏ வேல்முருகன்	த/பெ. ஆனைமுத்து	எண் 3 308 EVP ராஜேஸ்வரி அவென்யூ, மாதா நகர் பிரதான சாலை, மதானந்தபுரம், மணப்பாக்கம், காஞ்சிபுரம், தமிழ்நாடு 600125	14-11-2024	2,38,393.72
4	சென்னை	104142511384	பிரபு ஆர்	த/பெ. ராதாகிருஷ்ணன்	76, கருணீகர் தெரு, பெரியபாளையம், வடமதுரை, திருவள்ளூர், தமிழ்நாடு 601102	15-11-2024	1,80,249.88

ஏல தேதி 27 மார்ச், 2025 அன்று மாலை 3.00 மணி

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

homefirst We'll take you home

Home First Finance Company India Limited

CIN: L65990MH2010PLC240703,

Website: homefirstindia.com Phone No.: 180030008425 Email ID: loanfirst@homefirstindia.com

இணைப்பு–IV–A [விதி 8 (6)க்கான விதிமுறைகளைப் பார்க்கவும்)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002ன் விதி 8(6)ன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் கடன்தாரர்(கள்) மற்றும் உடன் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் காலம் (ii)ன்படி, ஈடுபெற்ற கடன்தாரரிடம் அடமானம் வைக்கப்பட்ட காலம் (iii)ல் விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள், கீழே விவரிக்கப்பட்டுள்ள நிலுவை தொகை மற்றும் வட்டியை திரும்ப பெற அவை ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது மற்றும் அதேசமயம் நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்தத் தவறியதன் விளைவாக, மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(2)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கீழ்க்கையொப்பமிட்டவர் மேற்சொன்ன சொத்தை விற்பனை செய்வதன் மூலம் நிலுவையை தொகையை பெறலாம் என திட்டமிட்டுள்ளார். மேலும் இது இங்கு விவரிக்கப்பட்டுள்ளபடி "எங்கே எப்படி எவ்வாறு இருக்கிறது" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு காலம்(i)ல் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை கடன்தாரர்(கள்)/உடன் கடன்தாரர்களிடமிருந்து திரும்ப பெற ''ஆன்லைன்'' மூலம் ஏலம் விடப்படும்.

வ. எண்.	கடன்தாரர்(கள்) மற்றும் உடன்கடன்தாரர்கள் பெயர்	சொத்து விவரங்கள்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி	டிமாண்ட் நோட்டீஸ் தொகை	சுவாதீனத் தேதி	சந்தை மதிப்பு	இஎம்டி தொகை (ரூ.)	மின்னணு ஏலத்தேதி மற்றும் நேரம்	இஎம்டி மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம்	அங்கீகரிக் கப்பட்ட அதிகாரி எண்
1	சேகர் எல், பி பூர்ணிமா	பிளாட் – 26 மேற்குப் பகுதி, பிளாக் / கட்டிட எண். அல்லது பெயர் – 32, பேஸ் – I, மனை எண்.26 (மேற்குப் பகுதி), ச.எண்.630/2C1, புதிய எஸ்.எண்.630/2C1A1–ல் உள்ள 1000 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம். "வர்த்தமான் கிராண்ட் சிட்டி", DTCP அங்கீகரிக்கப்பட்ட எண்.94/2021, கலகத்தூர் கிராமம், வலாஜாபாத் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் 631501–ல் இந்த சொத்து உள்